தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 059/ந/2022
நாள்.13.06.2022

திரு.N.செல்வராஜ்,
இடைப்பாடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி. – எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், இடைப்பாடி, மேட்டு தெரு, கதவு எண். 48 A, என்ற முகவரியில் வசிக்கும் திரு.N.செல்வராஜ், என்பவரின் 09.05.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.05.2022 அன்று பெறப்பட்டு 059/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், இடைப்பாடி, மேட்டு தெரு, கதவு எண். 48–A, என்ற முகவரியில் வசிக்கும் திரு.N.செல்வராஜ், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

இடைப்பாடி, மேட்டுத் தெரு, கதவு எண்.48–A என்ற முகவரியில் வசிக்கும் திரு.N.செல்வராஜ் என்பவர் எடப்பாடி நகராட்சியை சார்ந்த வார்டு E, பிளாக் 14, டவுன் சர்வே எண்.37ல் அங்காளம்மன் கோவில் தெருவிலுள்ள எல்லை சந்தினை எடப்பாடி, மேட்டுத்தெரு, எல்லை சந்து, கதவு எண்.11–1/49ல் வசிக்கும் திரு.முருகன் மற்றும் திரு. A. ஆறுமுகம் ஆகியோர் ஆக்கிரமிப்பு செய்ததன் விளைவாக பொதுமக்கள், வயது முதியோர் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு போக்குவரத்து நெரிசல் உள்ளது என்றும், மழை காலங்களில் மழைநீர் செல்வதற்கு போதிய பராமரிப்பும் செய்யப்படவில்லை என்றும் புகார் தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.05.2022 நாளிட்ட கடிதம் மூலம் இடைப்பாடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

இடைப்பாடி நகராட்சி ஆணையர் தனது 07.06.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

"சேலம் மாவட்டம், இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட இடைப்பாடி கிராமம் வார்டு E, பிளாக் 14, டவுன் சர்வே எண்.37ல் உள்ள நகராட்சி தெரு என வகைபாடு செய்யப்பட்டுள்ள இடத்தை அப்பகுதியில் வசிக்கும் திரு.முருகன் மற்றும் திரு.ஆறுமுகம் ஆகியோர் மேற்படி பாதையை ஆக்கிரமித்து உள்ளதாகவும், அதனை அகற்றி தரும்படியும் 13.09.2021 நாளிட்ட புகார் மனுவில் ஊர்பொதுமக்கள் கோரியுள்ளனர்.

08.11.2021 மற்றும் 27.05.2022 நாளிட்ட இவ்வலுவலக கடிதங்களில் மேற்காணும் ஆக்கிரமிப்பை அகற்ற ஏதுவாக அளவீடு செய்து சான்று வழங்கும்படி தனிவட்டாட்சியர் நகர நிலவரித்திட்டம், இடைப்பாடி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனைப் தொடர்ந்து குறுவட்ட அளவர், இடைப்பாடி அவர்கள் மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தினை அளவீடு செய்து ஆக்கிரமிப்பு பகுதிகளை வரைபடம் மூலம் தனது 07.06.2022 நாளிட்ட அளவீடு அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு வழங்கியுள்ளார்.

மேலும் குறுவட்ட அளவர், இடைப்பாடி அவர்களின் அறிக்கையை கொண்டு மேற்காணும் ஆக்கிரமிப்பை அகற்ற ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு முறையான அறிவிப்பு வழங்கி 25 தினங்களுக்குள் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் இடைப்பாடி நகராட்சி ஆணையரும் 08.06.2022அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.06.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.N.செல்வராஜ், 08.06.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சேலம் மாவட்டம், இடைப்பாடி வட்டம், சின்னமணலி கிராமம், வார்டு E பிளாக் 14, டவுன் சர்வே எண். 37ல் நகராட்சிக்கு சொந்தமான சந்தின் ஒரு பகுதி முருகன் மற்றும் ஆறுமுகம் போன்றோர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். பொதுமக்கள் பயன்படுத்தும் சந்தினை மேற்கண்ட நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் மேற்கண்ட சந்தை பொதுமக்கள் பயன்படுத்த சிரமப்படுகின்றனர். ஆக்கிரமிப்பு தொடர்பாக பலமுறை நகராட்சியினரிடம் புகார் மனுக்கள் அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் நகராட்சியினரால் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பை நகராட்சியினரால் உடனே அப்புறப்படுத்த ஆவன செய்யுமாறு

இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படத்தின் நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான இடைப்பாடி நகராட்சி ஆணையாளர், விசாரணைக்கு வரஇயலாததால், அவருக்கு பதிலாக நகரமைப்பு ஆய்வாளர் 08.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''இடைப்பாடி கிராமம், வார்டு E, பிளாக் 14, T. S. No. 37 –ல் உள்ள நகராட்சி தெரு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தின் ஒரு பகுதியை தனியர்கள் இருவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவித்து அளித்திருந்த புகார் மனுவினையொட்டி மேற்கண்ட இடத்தை அளவீடு செய்து தருமாறு வட்டாட்சியரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டு, ஆக்கிரமிப்பு தொடர்பான அறிக்கையை நகராட்சியிடம் வழங்கியுள்ளார். மேற்கண்ட அறிக்கையைத் தொடர்ந்து, ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களுக்கு முறையான அறிவிப்பு வழங்கி, 25 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக புகைப்பட நகலினை இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன்.

மேலும், இடைப்பாடி நகராட்சி ஆணையரின் 07.06.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் விளக்கமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், இடைப்பாடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இடைப்பாடி நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் புகாராக தெரிவித்த சேலம் மாவட்டம், இடைப்பாடியில் சின்ன மணலி கிராமத்திலுள்ள வார்டு E, பிளாக் 14, டவுன் சர்வே எண். 37ல் இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான எல்லை சந்து என்கிற சந்தின் ஒரு பகுதியை, அப்பகுதியில் வசிக்கும் திருவாளர்கள் முருகன் மற்றும் ஆறுமுகம் என்பவர்களால் ஆக்கிரமிப்பு செய்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுவதை, இடைப்பாடி நகராட்சி ஆணையாளர் ஏற்றுக் கொண்டுள்ளார். அதனையே இடைப்பாடி நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரும் தமது வாக்குமூலத்தில் உறுதி செய்துள்ளார்.

மேற்காணும் இடத்தின் ஆக்கிரமிப்பை குறித்து உரிய நடவடிக்கை எடுத்து 25 தினங்களுக்குள் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என இடைப்பாடி நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளரும் தெரிவித்துள்ளார்கள். மனுதாரர் ஆக்கிரமிப்பு குறித்து இடைப்பாடி நகராட்சியில் புகார் மனு அளித்தவுடனேயே நடவடிக்கை மேற்கொள்ளாமல், இம்முறைமன்ற நடுவத்தில் மனுதாரர் முறையீட்டு மனுவினை சமர்ப்பித்த பிறகே இடைப்பாடி நகராட்சி ஆணையரால் நடவடிக்கை எடுத்த செயலானது விரும்பத்தக்கதல்ல. ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் செயல்பட்ட கள அலுவலர்கள் மற்றும் இடைப்பாடி நகராட்சி ஆணையர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இதுபோன்ற

மெத்தனப்போக்கும், பணிப்புறக்கணிப்பும், கண்டுகொள்ளா தன்மையும், அலட்சியமும் வன்மையாகக் கண்டிக்கப்படுகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு இடத்தினை ஆய்வு செய்து, அதனை பொது பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் ஆக்கிரமிப்பை அகற்றிட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, சட்டப்பிரிவு 182–ன் கீழ் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என இடைப்பாடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் வருங்காலத்தில் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக நகராட்சியால் புகார் மனுக்கள் பெறப்பட்டவுடனேயே அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்திட நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.N.செல்வராஜ்,
   கதவு எண்.48–A, மேட்டுத் தெரு,
   இடைப்பாடி, சேலம் மாவட்டம் – 637 101.

2) ஆணையாளர், இடைப்பாடி நகராட்சி, சேலம் மாவட்டம் – 637 105.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/6/22

செயலாளர்

13/06/22

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032